**<u>30.06.2025</u>** **<u>அசல் வழக்கு எண்.108/2011</u>** **Starting Time : 01.06 .p.m.**

**<u>பி.வா.சா.1</u> திரு.சரண்ராஜ் த/பெ. லட்சுமணன்**

**<u>சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த நீதிமன்றத்தில் நடந்த அசல் வழக்கு எண்.7/2006-ன் பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் மேற்படி அசல் வழக்கு எண்.7/2006ன் தீர்ப்பு நகல் இது தான் என்றால் சரிதான். (அது வா.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளாக இருந்த அலமேலு, பன்னீர், ராஜா, காமாட்சி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் வந்தவாசி ஆகியோர்கள் மீது தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1 ஏக்கர் 20 சென்ட்டிற்காக பரிகாரம் கேட்டு தாவா தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.32/6-ல் 1 ஏக்கர் 20 சென்ட் ஆகும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது தவறுதலாக பட்டா பதியப்பட்டது, அதை சரி செய்யவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி அசல் வழக்கு எண்.7/2006ன் சர்வே எண்ணும், தற்போதுள்ள தாவாவின் சர்வே எண்ணும் 32/6 என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.7/2006-ல் சொத்து விவரத்தில் கூறப்பட்டுள்ள ஜக்பந்தி மயான பாட்டைக்கு மேற்கு, ஏரிக்கால்வாய்க்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறுமுகம் கிரய பூமிக்கு தெற்கு, லட்சுமணன் பூமிக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜம்மாள் யார் என்று எனக்கு தெரியாது. தற்போதுள்ள வழக்கின் ஜக்பந்தி ராஜம்மாள் நிலத்திற்கு வடக்கு, மாணிக்க பிள்ளை நிலத்திற்கு தெற்கு என கூறியுள்ளது சரியா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.7/2006ல் கூறியுள்ள ஜக்பந்தி தான் சரியானது ஆகும். வெள்ளவாரிக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வெள்ளவாரி என்றால் ஏரிகால்வாய் ஆகும். அசல் வழக்கு எண்.7/2006ல் ஏரிக்கால்வாய்க்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏரிக்கால்வாய் என்பது வெள்ளவாரி தான் என்றால் சரிதான். ஆறுமுகம் கிரய பூமியின் சர்வே எண். என்ன என்றால் 32/5 ஆகும். அது மொத்தம் 28 சென்ட் ஆகும். மேற்படி 28 சென்ட்டிற்கும், தாவா சொத்தின் 60 சென்ட்டிற்கும் சேர்த்து பட்டா (**வா.த.சா.ஆ.4**) வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4ல் சா்வே எண்.32/6எ-ல் 22.5 ஏா்ஸ் என்று உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்பட்ட பட்டாவில் 22.5ஏா்சிற்கு தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளாா் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது முன்னோா்களுக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்பதற்கு ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வாதியின் பூமிக்கு தெற்கு பக்கம் தான் எங்களது பூமி உள்ளது என்றால் சரிதான். ஆனால் வாதி பூமியின் சா்வே எண்.32/5 ஆகும். பூமியின் அமைப்புகளை காட்ட FMB புலப்படம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து எனது பதில் உரையில் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து பெற்று படித்து பாா்த்தேனா என்றால் பாா்த்தேன். 16.08.1946 (**வா.த.சா.ஆ.1**) கிரய ஆவணத்தில் தனபால் வீராசாமி பிள்ளைக்கு கிரயம் செய்துக் கொடுத்துள்ளாா் என்பதை படித்து பாா்த்தேனா என்றால் படித்து பாா்த்தேன். வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் வீராசாமி என்பவா் குப்பிய பிள்ளைக்கு கிரயம் செய்துக் கொடுத்துள்ளாா் என்பதை படித்து பாா்த்தேனா என்றால் படித்து பாா்த்தேன். மேற்படி குப்பிய பிள்ளையின் வாரிசுகளான சாமிநாத பிள்ளை, சாமிநாதனின் மைனா் மகன் வரதன் ஆகியோா்களிடமிருந்து வாதி ஆறுமுகம் 29.07.1993-ல் (**வா.த.சா.ஆ.3**) கிரயம் பெற்றாா், அந்த ஆவணத்தை படித்து பாா்த்தேனா என்றால் படித்து பாா்த்தேன். மேற்படி ஆவணங்களை படித்து பாா்த்த பிறகு தான் நான் பதில் உரை தாக்கல் செய்தேனா என்றால் ஆம். வா.த.சா.ஆ.3-வாதி கிரயம் பெற்ற ஆவணத்தில் சா்க்காா் புஞ்சை சா்வே எண்.32/6-ல் 60 செண்ட், சா்க்காா் புஞ்சை சா்வே எண்.32/5ல் 28 செண்ட் ஆக மொத்தம் 88 செண்ட் வாதி கிரயம் பெற்றுள்ளாா் என்றால் சரிதான். மேற்படி வாதி கிரயம் பெற்றவுடன் வாதி பெயரில் பட்டா (**வா.த.சா.ஆ.4**) 18.9.2006-ல் பெற்றாா் என்றால் சரிதான். சா்வே எண்.32/6-ல் 1.20 செண்ட்டிற்கு எனது பெரியப்பா பெருமாள் பெயரில் கடந்த 1981ஆம் வருடத்திற்கு முன்பு பட்டா இருந்தது. மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சா்வே எண்.32/6-ல் 1.20-ல் 60 செண்ட் நிலம் வாதிக்கும், 60 செண்ட் எனக்கும் பாத்யப்பட்டது என்றால் சரியல்ல. 1.20 செண்ட் நிலம் எங்களுக்கு பாத்யப்பட்டதாகும். அசல் வழக்கு எண்.7/2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஜக்பந்தி விவரப்படி ஆறுமுகம் (வாதி) பூமிக்கு தெற்கில் எங்களது பூமி உள்ளது என்றும், அதனால் வாதிக்கு 60 செண்ட்டும் எங்களுக்கு 60 செண்ட்டும்

என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு உள்ள தாய் பத்திரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான ஆவணங்கள் மின்கட்டண அட்டை, மின் இணைப்பு டெபாசிட் ரசீது மற்றும் வாரிசு சான்றிதழ் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு பெறும்போது கிராம நிர்வாக அலுவலரிடம் அனுமதி பெற்றேனா என்றால் பெற்றேன். அதன் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மின்வாரியத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சம்பந்தமான உரிமை ஆவணம் ஏதும் என் தரப்பில் தாக்கல் செய்யாததால், வழக்கு சொத்திற்கு வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமாக பட்டா ஏதும் என் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வழக்கு சொத்து சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் பட்டா வாதி பெயரில் உள்ளது என்றும், அவற்றை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளதால் வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Ending time : 02.02 p.m.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.